SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

=====================================================================================

# நாட்டுப்புறப் பாடல்களில் பண்பாடு

சே.இராஜேஸ்வரி,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் -635601

=====================================================================================

ஆய்வுச் சுருக்கம்

இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி என்பர், அதுபோல நாட்டுப்புறப் பாடல்கள் அங்கு வாழும் மக்களின் வாழ்வியலையும், சூழலியையும் அவர்களின் பண்பாடையும் வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள பல்வேறு வாழ்க்கை நிகழ்வுகளில் பாடப்படும். இப்பாடல்கள் சூழலியலை (அப்பாடல் பாடப்படும் சூழல்) மையமாகக் கொண்டிருந்தாலும். அம்மக்களின் பண்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றன. தாலாட்டு, திருமணம், பூப்புச் சடங்கு, ஒப்பாரி போன்ற பாடல்கள் மூலம் பல்வேறு பண்பாட்டு நிகழ்வுகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கலைச் சொற்கள்

தாராட்டு, ஊஞ்சோதி, ஜோகுல், வாய்மொழி, பிசியே, அங்கதம், பண்ணத்தி, ஆலாத்தி

## முன்னுரை

இன்றைய உலகம் மிகவும் சுருங்கிய ஒன்றாகிவிட்டது. விண்ணிலே மண்ணைக்காணும் அளவுக்கு மனிதனுக்கு ஆற்றலும் சூழலும் பிறவும் அமைந்துவிட்டன். ஒரு நாட்டின் உண்மையான பண்பாட்டை அறிய வேண்டுமாயின் அந்நாட்டின் அகத்தே ஊடுருவல் இன்றியமையாதது ஆகும். அந்த வகையில் நம் முன்னோர்கள் தங்களின் வாழ்வியல் கருத்துக்களை தம் பாடல் வழியாக பதிவு செய்துள்ளனர். எனவே தான் சு.சக்திவேல் அவர்கள் தம் நூலில் ஒரு நாட்டுமக்களின் நாகரீகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் மற்றும் வரலாறு பற்றிய நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம்பிடித்துக் காட்டுவது நாட்டுப்புறப் பாடல்கள் என்று குறிப்பிடுகின்றார். புலவர்களால் உருவாக்கப்பட்டுக் கற்றவர்களால் காப்பாற்றப்படுவை இலக்கியங்கள். பாமர மக்களால் உருவாக்கப்பட்டு அவர்களாலேயே காப்பாற்றப்படுபவை நாட்டுப்புறப் பாடல்கள் எனாலம். அத்தகைய நாட்டுப்புறப்பாடல்களில் காணப்படும் பண்பாடுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## நாட்டுப்புறப் பாடல் விளக்கம்

“நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்கள் ஆகும். நாட்டுப்புறப்புறப்பாடல்கள் நாட்டுப்புறப்புற மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. மனிதன் பிறப்பு முதல் இறப்புவரையுள்ள நிகழ்வுகள் நாட்டுப்புறப்பாடலின் பொருளாகின்றன”. என்று சு. சக்திவேல் அவாகள் குறிப்பிட்டுள்ளனார்.

## நாட்டுப்புறப்பாடல்களின் தென்மை

சங்க இலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்களின் செல்வாக்கினை காணக்கூடியதாக உள்ளது. கலித்தொகை, பரிபாடல் ஆகிய இலக்கியங்களில் செப்பம் செய்யப்பட்ட நாட்டுப்புறப் பாடல்களைப் போன்று காணப்படுகின்றன.

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் பல பாடல்கள் நாட்டுப்புற பாடல்களை அடியொட்டியவையே. நாயன்மார்களும், ஆழ்வார்களும் நாட்டுப்புறப் பாடல் வடிவங்களைப் பயன்படுத்திய போக்கினைக் காண முடிகின்றது.

சிற்றிலக்கியங்கள் பலவும் நாட்டுப்புற இலக்கிய வகைளை அடிப்படையாக்க் கொண்டு இயற்றப்பட்டைவையே. உதாரணமாக ஏசல், ஏற்றம், தெம்மாங்கு, ஊசல் முதலானவற்றை கூறலாம்.

*நாட்டுப்புறப் பாடல்களின் வகைகள்*

*நாட்டுப்புறப் பாடல்களானவை பாடப்படும் சூழல் நிகழ்வுகளின் தன்மைக்கேற்ப அவை அமைந்து உள்ளன. அதன் வகையில் சூழலையும், குறிக்கோளையும் பொறுத்து நாட்டார் பாடல்களைத் தாலாட்டுப்பாட்டு, முளைப்பாரிப் பாட்டு அல்லது கும்மிப் பாட்டு, திருமணப்பாடல், தொழில் பாடல்கள், ஒப்பாரிப் பாட்டு, நடவுப்பாட்டு, ஏற்றப்பாட்டு என வகைப்படுத்தலாம்.*

*"ஆறு.இராமநாதன் அவர்கள் புதிய வகைப்பாட்டு முறை அறியமுகம் செய்யப்பட்டது. அவை தாலாட்டு, குழந்தை வளர்ச்சி நிலை பாடல்கள், விளையாட்டு பாடல்கள், தொழிற் பாடல்கள், வழிபாட்டுப் பாடல்கள், கொண்டாட்டப் பாடல்கள், இரத்தல் பாடல்கள், இழப்பு பாடல்கள் என்பனவாகும்.*

*நாட்டுப்புறப் பாடல்களின் சிறப்புகள்*

*நாட்டார் பாடல்கள் மக்கள் வாழ்வியலைப் பிரதிபலிப்பதாகவும் வாழ்வியலோடு கலந்தவையாகவும் விளங்குகின்றன. வாழ்வின் எல்லா சந்தர்ப்பங்களிற்கும் ஏற்ற வகையில் மக்களால் உருவாக்கப்பட்டவை ஆகும். கடினமான வேலைகளைச் செய்யும் போது வேலையில் களைப்புத் தன்மை தெரியாமல் இருப்பதற்காக பாடப்படுகின்றன. மேலும் நாட்டார் பாடல்கள் கலவைகளை மறக்கச் செய்வதற்கும் காதல் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தவும் வலிகளைக் கூறவும் சிறந்த ஒரு கருவியாக விளங்குகின்றன.*

*தொல்காப்பியமும் நாட்டுப்புறப்பாடலும்*

*தொல்காப்பியர் நாட்டுப்புற இலக்கியத்திற்குக் கூறும் வரையறையைக் காண்போம். தொல்காப்பியர் ஏழு யாப்பு வகைகளைக் குறிப்பிடும். இதனை,*

*"பாட்டு உரைநூலே வாய்மொழி பிசியே*
*அங்கதம் முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்" (தொல்.செய். 79)*

*என்று வழங்கப்படுவது உண்டு. யாப்பின் வழியது என்று குறிப்பிடுக்கின்றனார். அடி வரையில்லாத செய்யுட்கள் என இலக்கணத்தில் குறிப்பிடப்படுகிறது. அடுத்தாக "பண்ணத்தி" என்ற ஒன்றின் இலக்கணத்தைக் கூறுகிறார்.*

*"பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்*
*பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே" (தொல்.செய்.180)*

*தொல்காப்பியர் கூறும் பண்ணத்தி நாட்டுப்புறப் பாடல்களை குறிக்கின்றது. எனலாம். பண்ணத்தி என்ற சொல்லுக்குப் பண்ணை விரும்பு வது என்று பொருள். எனவே தொல்காப்பியர் தம் நூலில் நாட்டுப்புறப் பாடல்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளர்.*

*தமிழக நாட்டார் பாடல்கள் வகைப்பாடு*

*நாட்டாறியல் பற்றிய ஆய்வு செய்த ந.வானமாலை அவர்கள் நாட்டாறியல் பாடல்களை அதன் பொருளைக் கொண்டு எட்டு வகையாக பிரித்துள்ளார். இதனை,*

- *தெய்வங்கள்*
- *மழையும் பஞ்சமும்*
- *தாலாட்டு*
- *காதல்*
- *திருமணம்*
- *குடும்பம்*
- *சமூகம்*
- *உழவும் தொழிலும்*
- *ஒப்பாரி*

*என்று நா. வானமாமலை அவர்களின் நாட்டுப்புறவியல் முறைகளை பலரும் ஏற்றுக் கொண்டனர்.*

*தாலாட்டுப் பாடல்கள்*

*தாலாட்டை மலையாளத்தில் தாராட்டு என்றும், தெலுங்கில் ஊஞ்சோதி என்றும், கன்னடத்தில் ஜோகுல் என்றும் கூறுவர். தாலாட்டுப் பாடல்கள் கிராமிய மக்களின் வாழ்க்கையோடு அவர்களின் உணர்வுகளோடு பின்னிப் பிணைந்த நாட்டுப் பாடல் வகைகளில் ஒன்று தாலாட்டு பாடலாகும்.*

*தாய்! ஆழம் காண முடியாத ஓர் அன்புக்கடல் அந்த அன்புக்கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு என்பார். ஆறு. அழகப்பன் அவாகள் விழித்துக் கொண்டிருக்கும் குழந்தைக்கு*

*வேடிக்கைக் காட்டும் தாய் குழந்தை விழிகளை மூடித் துயில் வேண்டும் என்று எண்ணும் போது பாட்டு இசைக்கின்றாள்.*

*“பச்சை இழுப்பை வெட்டி*
*பவளக்கால் தொட்டிலிட்டு*
*பவளக்கால் தொட்டிலிலே*
*பாலகனே நீயுறங்கு”*

*என்று நா.வானமாமலை அவர்கள் பாடல்கள் மூலம் அறியப்படுகிறது. இன்னும் சில தாலாட்டுப் பாடல்களில் உறவினரின் பெருமைகள் எல்லாம் வருகின்றன. இவற்றில் மாமன் பெருமையைக் கூறும் பாடல்களே அதிகம் எனலாம். இதனை,*

*“நிறைந்த தலைவாசலிலே*
*வந்து நிற்பான் உன்*
*மாமன்*
*தொட்டிலிட்ட நல்லமாமன்*
*பட்டினியாய் போராண்டா*
*பட்டினியாய் போறமாமன்*
*உனக்கு பரியம் கொண்டுவருவானா!”*

*என்று பாடல்கள் மூலம் உறவுமுறைகளை அறியமுடிகிறது.*

*திருமணப் பாடல்கள்*

*திருமணம் ஒரு புனிதமான சடங்காக நடத்தப்படுகிறது. திருமண நிகழ்ச்சிகளின் ஊரே இனிமையான பாடல்கள் இறை வேண்டுதலாகவும் இன்பத் தூண்டுதலாகவும் பாடப் பெறுகின்றன. பெண்கள் மணமக்களைச் சூழ்ந்து நின்று வாழ்த்துவது பெரு வழக்காக உள்ளது. மணவினையினைச் சிறப்பித்தும் பாடுகின்றனர்.*

*திருமணம் முடிந்தப் பின்பு மணமக்களை ஆரத்தி எடுக்கும் போது கண் டிஸ்டி படக்கூடாது என்ற கருத்தில் பாடும் வழக்கம் உண்டு.*

*“ஆலாத்தி ஆலாத்தி*
*ஐந்நூறு ஆலாத்தி*
*முத்தாலே ஆலாத்தி*
*முன்னூறு ஆலாத்தி*
*பாக்காலே ஆலாத்தி*
*பலநூறு ஆலாத்தி*
*வெத்திலையால் ஆலாத்தி*
*வெனுநூறு ஆலாத்தி*
*குங்குமத்தால் ஆலாத்தி*
*கோடி கோடி ஆலாத்தி*
*மஞ்சளால் ஆலாத்தி*
*மங்கலமாய் ஆலாத்தி”*

*என்று பாடுவது உண்டு. தமிழகத்தில் சில இடங்களில் இந்த பாடல் அழிவயும் நிலைகளில் உள்ளன. நெல்லை மற்றும் கோவை மற்றும் இன்னும் பல பகுதிகளில் இப்பாடல் காணப்படுகின்றன.*

*ஒப்பாரிப் பாடல்கள்*

*மனிதன் பிறப்பதும் வாழ்வதும் இறப்பதும் இயற்கையின் செயல்களாகும். முன்னது தோற்றமாகவும் பின்னது மறைவாகவும் இருப்பதினால் இரண்டும் இரு துருவ வேறுபாட்டுடன் மக்கள் மனதில் பதிகின்றன. வாழ்க்கை பிறப்பையும் இறப்பையும் இணைக்கும் நிகழ்ச்சிகள் நிறைந்த்து.*

*இறந்தோரை நினைத்து ஏங்கியழும் பாடல்கள் ஒப்பாரிப் பாடல் என்று கூறுவா. அவற்றின் திருந்திய வடிவங்களாகக் கையறுநிலைப் பாடல்கள் அமைகின்றன. நாட்டுப்புற மக்களிடையே இத்தகைய ஒப்பாரிப் பாடல்கள் மிக அதிகாமப் பாடப் படுகின்றன. பெற்ற அன்னை இறந்து விடுகிறாள். அவாகளை நினைத்து பாடும் பாடல்,*

*“என்னைப் பெற்ற அம்மா!*
*கல்லுறுத்த மண்ணுறுத்த கானகம் போய்ப் படுத்தாயே*
*ஏந்தி யெடுத்துநீ இடது கொங்கை பாலூட்டி*
*வாரி யெடுத்துநீ வலது கொங்கை பாலூட்டி*
*வாயார முத்தமிட்டு வண்ணவண்ண திலகமிடுவாயே*
*என்னைப் பெத்த அம்மா !”*

*என்று உருக்கமாக பாடலாக இது அமைந்துள்ளன.*

*தமிழகத்தில் பெருமாலும் ஆன நாட்டுப்புற பாடல்கள் அழிந்துக் கொண்டும் நிலையில் பற்சில இடங்களில் மட்டுமே நாட்டுப்புறப் பாடல்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் பல மாவட்டங்களில் நாட்டுப்புற ஆய்வாளர் நாட்டார் பாடல்களை ஆய்வு செய்து வருகின்றன. இன்று சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது.*

*முடிவுரை*

*தமிழகத்தில் இன்று பல வகைப்பாடல்கள் வந்திருந்தலும் அவை நாட்டுப்புறப் பாடல்களுக்கு இணையாக இல்லை என்று கூறமுடியும். மனிதன் பிறப்பு முதல் வரை நாட்டார்ப் பாடல்கள் பாடப்படுகின்றன. இவை எப்போதும் பேணிப்பாதுகாக்க படவேண்டிய பொக்கிஷங்கள் ஆகும். நாட்டுப்புறப் பாடல்களின் பெருமதிப்பினை உணர்ந்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் வகையில் நாம் இருக்கிறோம்.*

*துணைநூல் பட்டியல்*


1. *சக்திவேல்.சு முனைவர், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை-600108.*
2. *சுப்பிரமணியன்.ச, தொல்காப்பியம் மூலமும் உரையும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ். 2004.*
3. *வானமாமலை.நா, தமிழர் நாட்டுப் பாடல்கள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ். 2006*
4. *அழகப்பன்.ஆறு முனைவர், நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு, பாரிநிலையம், சென்னை -600108.*
5. *பெருமாள்.ஏ .என் முனைவர், கும்மிப்பாடல்கள், உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், டி.டிடி. ஐ அஞ்சல், தரமணி சென்னை -600113.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********